வெளிப்படைக் கடிதம்.

சென்னை மாகாண முதல் அமைச்சர்,
உயர் திருவாளர். கனம் சக்கரவர்த்தி
இராஜகோபாலாச்சாரியாரவர்களுக்கு,

திருநெல்வேலி,
தமிழ்ப் பாதுகாப்புச் சங்கத்தார்
தெரிவிப்பது என்னவென்றால்,

(1) தமிழ் கலவை மொழியன்று. தனிமொழி. குமரி தொடங்கி இமயமலைவரை பண்டுவழங்கிய மொழி. தமிழ்மக்களது நாகரிகம் பழக்க வழக்க முதலிய சரித்திரநுட்பங்கள் யாவும் அம்மொழியிலேயே அடங்கிக் கிடக்கின்றன. தமிழ் மக்கள் வரலாற்றை ஆராயப்புகுவோர் தமிழ்மொழி வரம்பிலே நின்று ஆராய்ந்தால் உண்மை காண்பர். தமிழைப் பிறமொழிகளின் துணையால் ஆராயப்புகுதல் தப்பும் சிக்கலுமான வழியாகும். இப் பொழுது குமரிதொடங்கி வேங்கடம் முடியவுள்ள ஜில்லாக்களில் வழங்கும் தாய்மொழி தமிழ் ஆகும். அம் மொழியை வழங்கும் மக்கள் தமிழ் மக்கள் என்று அழைக்கப்படுவர்.

பழைய உண்மைகளை விரித்து எழுதுவதற்கு உரிய பொழுது இதுவல்ல. தாய்மொழியாகிய தமிழ்மொழிப்பற்றில் தாங்கள் மிகவும் தலைசிறந்தவர்கள் என்பதைத் தங்கள் கட்டுரை சில தெரிவிக்கின்றன. தாய்மொழியைச் சிரமேல் தாங்குவோம் என்று இந்திப்பாட முகவுரையில் தாங்கள் எழுதியிருக்கின்றீர்கள். தங்கள் இவ்வுள்ளக்கிளர்ச்சிக்கு நாங்கள் என்றும் கடமைப்படுகின்றோம்.

ஆனல் இதற்கு மாருகத் தாங்கள் மேற்கொண்ட செயல் எங்கள் உள்ளத்தைப் புண்படுத்துகின்றது.

(2) தமிழ் நாட்டில் தமிழ் மொழி இதுவரை கட்டாயப்பாட மாக ஏற்படவில்லே. விருப்பப்பாடமாகவே அமைந்திருக்கின்றது. இதனல் என்ன ஏற்படுகின்ற தென்றல் தமிழ்ச்செல்வி தன் வீடாகிய தமிழகத்தில் விருப்பமிருந்தால் வீற்றிருக்கலாம் என்று கூறுவதை யொத்திருக்கின்றது. இந்தி மொழியையோ தமிழ்ச் செல்விக்கு உரிமையான வீட்டில் கட்டாயமாகக் குடியிருத்தத் தாங்கள் முயல்கின்றீர்கள். இம்முயற்சிதானு குடியரசாட்சியின் பயன்? தமிழ்மக்களின் வாக்குரிமையால் அமைச்சர் பொறுப் பேற்ற தாங்கள் இதனல் தமிழ்மொழிக்குக் கேடுசூழ்பவராகக் கருதப்படுகின்றீர்களன்றே?

(3) பள்ளிமாணவர்கட்கு ஹிந்தி மொழியில் புலமையளிக்க விரும்பவில்லே யென்றும், உரையாடல் முதலிய செயல்முறை ஆற்றலே அளிப்பதற்காகமட்டுமே ஹிந்திப்பயிற்சி யளிக்கப்படு மென்றும், தமிழ் மொழிப்பயிற்சி குறைக்கப்படமாட்டாதென் றும், ஆதலால் இந்திப்பயிற்சியால் தாய்மொழிப் பயிற்சிக்குத் தீமைவிளையாதென்றும் தாங்கள் கருதுவது தங்கள் கிரிஸ்தவ கலாசாலே விரிவுரையால் அறிந்தோம். பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குட்பட்ட சிறுவர்க்குப் பிறமொழிப் பயிற்சியில் ஊற்றங்கொள்வது அரிதென்றும், அரிதில் முயன்றலும் மாண வர்க்கு அம்முயற்சி சிறிதும் பயன்தராதுஎன்றும், கல்வி பயிற்று விக்குந்துறையில் கைபோயவர் கூறுகின்றார். பெருமுயற்சி செய் தும் சிறுபயனும் விளேக்காத இம்முயற்சியால் இளேஞர் தமிழ் மொழியைத் திருந்தக் கற்க இடையூறு நேரிடும். அன்றியும், தாய் மொழியைத் திருந்தக்கற்கத் தலேப்படுதற்கு ஏற்ற காலமும் அதுவாகும். சிறுவர்கள் பன்மொழிப்பயிற்சியால் தடுமாற்றமும் சோர்வும் அடைந்து, பாடச்சுமையால் தாங்கமாட்டாது தமிழ் மொழிப் பயிற்சியை முற்றும் கைநெகிழ விடுவர். திரு. பண்டித ஜவஹர்லால் நேரு, லண்டன் கல்விக்கழகக் கல்விமுறை நிபுணர் 'உட்' என்னுந் துரைமகனர், 'இந்து' ஆசிரியர் முதலியோர் கொள்கைகள், மேற்கூறிய எம் கொள்கைக்கு அரண்செய்கின்

றன. ஆதலால் இளஞ்சிறார்கட்கு 'ஹிந்தி' போதனை அவர்களது தமிழ்ப்பயிற்சிக்குப் பெருங்கேடு பயக்கும் என்பது தெள்ளிதிற் புலனுகின்ற தன்றே? மொழி கேடுறின், அம்மொழி வழங்கும் மக்கள், இருந்த இடமே தெரியாமற் போவார்களல்லவா?

(4) இண்டத்தர வகுப்பு முதல் மூன்றில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினுல் தமிழ் மொழிப் பயிற்சி அம் மாணவர்க்கு எவ்விதம் உண்டாகும்? இம்மட்டில்கூடத் தாங்கள் நின்று விடாமல் நான்காவது பாரமுதல் சரித்திரமும் பூகோளமும் இந்தியில் உண்டாக்கிக் கற்பிக்கப்போவதாகத் தெரிகின்றது. முதல் மூன்று பாரங்களிலும் இந்திமொழியும், அதற்கு மேல்வகுப்புகளில் சரித்திரமும் பூகோளமும் இந்தியில் கட்டாயமானுல் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கு இடம் எங்கே? இவ்வகுப்புகட்கு இப்போது ஏற்பட்டிருக்கின்ற பாடமாகிய சுமை மிகவும் பளுவானதென்று அறிஞர்கள் கருதுகின்ற இக்காலத்தில் புதியதோர் ஹிந்திச் சுமையையும் ஏற்றுவது நீதியா?

(5) நம் தேசத்திற்குப் பொதுபாஷையாக 'ஹிந்தி' வேண்டுமென்று சொல்கின்றீர்கள். ஏறக்குறைய 150 ஆண்டுகளாக ஆங்கிலமொழி நம் நாட்டிற் பரவியும் 100-க்கு $2\frac{1}{2}$ பேர்தான் ஆங்கிலங் கற்றவர்களாக இருக்கின்றார்கள் தாய்மொழியிலோ 100-க்கு 95 பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். 95 பேர்களுக்குப் பள்ளிக்கூடம் என்பதே தெரியாது. இந்த நிலைமையில் இந்தியைத் தாங்கள் நினைக்கின்றபடி பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக்கி விட்டால் 95 பேரும் இந்திமொழியைப் பயில்வது எப்படி என்பதை விளக்கவேண்டும்? இதனுல் பொது மொழியாக, இந்தி, தமிழ் நாட்டில் பரவி விடுமா?

(6) 'இந்தி' பொது மொழியாக நம் நாட்டிற்கு எந்தத் துறையில் அவசியமாயிருக்கின்ற தென்பதைப் பார்ப்போம். உழவுக்குச் சிறிதும் அவசியமற்றது. நம் நாடோ உழவுதொழிலில் தலை சிறந்து நிற்கின்றது. வர்த்தகம் இந்தியை விரும்புகின்றதா என்றுல் நம் நாட்டுவர்த்தகம் ஆங்கிலத்தை விரும்புகின்றதைப் போன்ற விருப்பம் மற்றொரு மொழியிற் செலுத்துவதாகத் தெரியவில்லை. தமிழறியாத வடநாட்டார் தமிழ் நாட்டில் வர்த்த

கம் புரிகின்றார்கள். அவர்கள் தமிழைப் படிக்கவில்லை. தமிழ் மட்டும் அறிந்த தென்னாட்டார் பலமொழிகள் வழங்கும் வடநாட்டில் வர்த்தகம் செய்கின்றார்கள். அவர்கள் அந்நாட்டு மொழிகளைக் கற்கவில்லை. ஆனால் அவர்கள் தொழிலிற்கு அங்கே போனபின், வேண்டுமளவு அம்மொழி பேசக்கற்றுக்கொள்கின்றார்கள். ஆங்கிலம் அவர்கட்குப் பெருந்துணையாய் நின்று உதவுகின்றது. ஆதலின் நம் நாட்டு வர்த்தகம் இந்திமொழியை விரும்புகின்றதற்குச் சான்று காட்டமுடியுமா?

இனி அரசியல்துறை இந்தி பொது மொழியாவதை விரும்புகின்ற தென்று கருதினால் நமக்குப் பூரணசுயராஜ்யம் வரும் பொழுது, பெடரேஷன் அதாவது சமஷ்டி அரசியலில் தென்னாட்டுப் பிரதிநிதிகளாய் எத்தனைபேர் செல்லக்கூடும். இருவர் மூவருக்கு மேற்படுமா? அவர்கட்கு இந்திமொழிப்பயிற்சி எதற்கு? அவசியமானால் ஒருசிலர் தக்கபருவம் வாய்ந்தவர்கள் கற்றுக்கொள்ளட்டும். அல்லது அரசியல் துறையில் ஒவ்வொரு மாகாணங்களிலும் அவ்வம்மாகாண மொழிகளிலேயே நடைபெறலாம். சமஷ்டியில் உலகப் பொதுமொழியாகத் தாங்கள் ஒப்புக் கொள்ளுகிற ஆங்கிலத்தில் நடைபெற்றால் வருங்கேடென்ன? உலகப்பொதுமொழியாக ஆங்கிலமும், நம் தேசப்பொது மொழியாக ஹிந்தியும் வரவேண்டுமென்று குறிப்பிடுகின்றீர்களே! நூற்றுக்கு 2½ பேர்மீதம் பரவி பழக்கத்திலிருக்கிற ஆங்கிலமொழியையே தேசப்பொதுமொழி யாக்கிக் கொண்டால் என்ன? பொதுமொழிவேண்டும் என்பதை ஒப்புக்கொண்டால் ஒன்றே பொதுமொழியாக இருக்கவேண்டும். தேசப் பொது உலகப்பொது என்பது எதற்கு? உலகமுழுவதும் பரவியிருக்கிற ஆங்கிலமொழி தேசமுழுவதும் பொது மொழியானால் நம் மாணவர்கள் இந்திமொழியையும் கற்பதென்பது வீண்காலக் கழிவு ஆகுமல்லவா? ஒருதேசத்திற்கு இரண்டு மொழிகளைப் பொதுமொழிகளாக்குவது மிக்க அநீதியாகுமல்லவா? ஆங்கிலத்தைப் பொது மொழியாக்கவேண்டும் அல்லது இந்தியைப் பொது மொழியாக்க வேண்டும். ஆனால் ஆங்கிலத்தை ஒதுக்கத் தங்கள் உளம் துணியவில்லைபோலும். H. G. wells முதலிய உலக அறிஞர் சிலர் கூறுகிறபடி உலகமெல்லாஞ் சேர்ந்து ஒரே ஆட்சி

வருகின்ற பிற்காலத்தில் இந்தியாவில் அரசியற் காரியங்கள் ஆங்கிலத்தில் நடைபெறுவது உதவியாயிருக்குமன்றி இந்திமொழி பயனுடையதாகுமா?

(7) இந்திமொழியைப் பொதுமொழியாக்க வேண்டுமென்று கூறுகின்றீர்களே! ஈழத்துச் சிவானந்த அடிகள் சொல்லுகிறபடி இந்தியில் மூன்று பிரிவான மொழிகளிருக்கின்றன. அவற்றில் உட்பிரிவுகளாய் 11 மொழிகளிருக்கின்றன, அவைகளில் எந்த மொழியைப் பொதுமொழியாக்கப் போகின்றீர்கள்? இந்தி மொழியை வழங்குகின்ற மக்கள் 20 கோடியென்று குறிப்பிடுகின்றீர்கள். அஃது உண்மை யென்பதற்குத் தாங்கள் போதிய ஆதரவு காட்டமுடியுமா? கூடுமானால் தயவுசெய்துகாட்டுங்கள்.

35 கோடி இந்தியமக்களில் 2 கோடி மக்கள்மட்டுமே இந்தி மொழி வழங்கிவருகின்றார்கள் என்றும், 33 கோடி மக்கள் வேறு பல மொழிகளை வழங்கி வருகின்றார்கள் என்றும் தெரியவருகின்றது. ஆதலால் இந்திமொழியைக் கட்டாயப்பாடமாக்க வேண்டுமென்ற கொள்கை ஒத்ததன்று. காங்கிரஸ்அரசியலில் வெற்றிபெற்ற 7 மாகாணங்களில் சென்னை மாகாணத்தில் மட்டும் இந்தியைப்பற்றிய முயற்சி வருவதற்கு என்ன இன்றியமையாத அவசியம் சேர்ந்ததோ தெரியவில்லை.

(8) தாய்மொழிப்பற்றில் தாய்மொழியைச் சிரமேற்றாங்குகின்றோமென்ற தொடர்மொழியால் மிகச்சிறந்த பற்றுடையார் போற் காட்டிக்கொண்ட தாங்கள், அம்மொழியை அடியோடு நசுக்குவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டதாகவே தெரிகின்றது. எதனால்? இந்தியநாட்டில் வெவ்வேறு மொழிகளை வழங்கும் ஒவ்வொரு இனத்தாரும் தாய்மொழிப் பயிற்சியோடு அவ்வந் நாட்டுக்கு அண்மையிலுள்ள மற்றொரு நாட்டு மொழியையும், தேசப் பொதுமொழியாக இந்தியையும், உலகப் பொது மொழியாக ஆங்கிலத்தையும் கற்கவேண்டுமென்று இந்திப்பாட முகவுரையிற் கூறுகின்றீர்கள்; ஆகவே நான்கு மொழிகளும் நம் மாணவர்கள் தங்கள் கருத்தின்படி பயில வேண்டியவர்களாகின்றார்கள். நமது 11, 12, 13 வயதுள்ள இளமாணவர்கட்கு இஃது எவ்வளவு ஒரு

பெருஞ்சுமை! அம்மாணவர் எதிற்றான் தேர்ச்சி பெறுவர்? ஒரு மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றபின்னர் (அதாவது) 20 வயதிற்கு மேல் மற்றொரு மொழி பயின்றால் புலமை மிகும். பலமரங் கண்டதச்சன் ஒருமரமும் வெட்டான். இம்மட்டில் தாங்கள் நிற் காமல் நம் முன்னோர்களுக்காக சம்ஸ்கிருதமும் கற்கவேண்டு மென்று கூறுகின்றீர்கள். அம்மொழிப்பயிற்சி சாதாரண மக்க ளின் உலக காரியங்கட்குப் பயன்படுமா? தங்கள் முன்னோருக் காகத் தாங்கள் அம்மொழி பயிறல் கடமை. எங்கள் முன்னோ ருக்காகத் தமிழ் மொழியைப் போற்றல் எங்கள் கடமையாகும். ஆகவே, ஐந்து மொழிகளை நம் தமிழ் மாணவர்கள் கற்கவேண்டு மென்று தங்கள் மனப்பான்மை தூண்டுவது எக்காரணம் பற்றியோ!

(9) கடைசியாக நாங்கள் கூறுவது என்னவென்றால், "இது வரை நடந்துவந்த எதேச்சாதிகாரத்தை நாங்கள் ஒழிப்போம் பேசுவதிலும் எழுதுவதிலும் செய்வதிலும் தட்டுத்தடையின்றி உரிமையை வழங்குவோம். மனிதன் மற்றொருவருக்கு அடிமை யாதலை ஒழிப்போம். பொது மக்கள் உரிமை ஆட்சியை நிலை நிறுத்துவோம். வரிச்சுமையைக் குறைப்போம்" என்று அறை கூவி எங்கள் வாக்குரிமைகளைப்பெற்று அரசியற் பதவியிற் பொறுப்பை வகித்திருக்கின்ற தாங்கள், இந்திமொழியை இந்நாட் டிற்குக் கொண்டுவருவதில் தமிழ்மக்களின் மனப்பாங்கையறிந்து கொண்டு அவ்வழிநில்லாது எதேச்சாதிகாரமாகக் கொண்டுவந்த தங்கள் செயல் எங்களுக்கு வெறுப்பைக்கொடுக்கின்றது.

இனியாவது தயவுசெய்து இந்திமொழியைக் கட்டாயப் பாடமாக்காமல், தங்களுக்கு அவசியமென்று தோன்றினால் பள்ளிக்கூடத்திற்கு வெளியில் 20 வயதுக்கு மேற்பட்டவர்கட்கு விருப்பப்பாடமாக ஆக்கிக்கொண்டு, தமிழ் நாட்டுத் தாய்மொழி யாகிய நம் தமிழ்மொழியைக் கட்டாயப்பாடமாக்கித் தரும்படித் தங்களை மிகவும் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

22—9—'37. தமிழ்ப் பாதுகாப்புச் சங்கத்தார்.

ஷம்ஸியா பிரஸ், வடக்கு ரதவீதி, திருநெல்வேலி.—9-37.